செய்தி வெளியீடு எண். 227 நாள்: 30.04.2017

# திருவள்ளூர் அரசு தலைமை மருத்துவமனையிலும் மற்றும் நகராட்சி அலுவலகத்தில் மக்கள் நல்வாழ்வு (ம) குடும்ப நலத்துறை முதன்மைச் செயலாளர் மருத்துவர் ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., ஆகியோர் தீவிர போலியோ சொட்டு மருந்து முகாமினை (இரண்டாவது தவணை) துவக்கி வைத்தார்கள்.

~~~~~

திருவள்ளூர் அரசு தலைமை மருத்துவமனையிலும் மற்றும் நகராட்சி அலுவலகத்தில் மக்கள் நல்வாழ்வு (ம) குடும்ப நலத்துறை முதன்மைச் செயலாளர் மருத்துவர் ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., ஆகியோர் தீவிர போலியோ சொட்டு மருந்து முகாமினை (இரண்டாவது தவணை) இன்று (30.04.2017) துவக்கி வைத்தார்கள்.

மக்கள் நல்வாழ்வு (ம) குடும்ப நலத்துறை முதன்மைச் செயலாளர் கூறியதாவது கொடுமையான போலியோ நோய்களை முழுமையாக ஒழிப்பதற்க்கு தீவிர போலியோ சொட்டு மருந்து முகாம்கள் 1995 முதல் சர்வதேச மற்றும் தேசிய அளவில் நடைபெற்று வருகிறது. தமிழ்நாடு மாநிலம் கடந்த 13 ஆண்டுகளாக போலியோ இல்லாத மாநிலமாக திகழ்கிறது. இன்று(30.04.2017) இரண்டாவது தவணையாக தமிழகத்தில் மொத்தம் 43051 மையங்கள் செயல்பட்டு வருகிறது. மேலும் 1652 பொது மக்கள் அதிகம் கூடும் பேருந்து நிலையம், இரயில் நிலையம் போன்ற இடங்களில் தற்காலிக மையங்களும், 1000 நடமாடும் மையங்களும் செயல்பட்டு வருகிறது. இப்பணிகளில் 2 இலட்சம் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். இம்முகாம்கள் மூலம் 70 இலட்சம் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பொது மக்கள் அனைவரும் இம்முகாமினை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கூறினார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் கூறியதாவது திருவள்ளூர் மாவட்டத்தில் ஐந்து வயதிற்குட்பட்ட சுமார் 2,39,189 குழந்தைகளுக்கு 1259 நிலையான மையங்களிலும், மக்கள் அதிகமாக கூடும் இடங்களில் 44 மையங்களிலும் மற்றும் 40 நடமாடும் மையங்கள் மூலமாகவும் மொத்தமாக 1343 முகாம் மூலமாகவும் நாடு தழுவிய தீவிர போலியோ சொட்டு மருந்து முகாம் இரண்டாவது தவணை தமிழ்நாடு முழுவதும் நடைபெறுகிறது. இரண்டாவது தவணை போலியோ சொட்டு மருந்து முகாம் ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், நகராட்சி அலுவலகங்கள், ஊட்டசத்து மையங்கள், பள்ளிகள் போன்ற இடங்களில் முகாம்கள் அமைக்கப்பட்டு, சொட்டு மருந்து கொடுக்கப்படவுள்ளது. மேலும் செங்கல்சூளைகள், பெரிய அளவிலான கட்டுமானப்பணிகள் நடைபெறும் இடங்கள், குடிசைப்பகுதிகள், ஆகிய இடங்களிலுள்ள குழந்தைகளுக்கு சிறப்பு முகாம்கள் வாயிலாக சொட்டுமருந்து வழங்கப்படவுள்ளது. இம்முகாம் சிறப்பாக நடைபெற பொது மக்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு தர வேண்டும் என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் இணை இயக்நர் (மருத்துப் பணிகள் மற்றும் குடும்பநலத்துறை) மரு.ஜி. மோகனன், துணை இயக்குநர்(சுகாதாரப் பணிகள்) மரு.ஜே.பிரபாகரன், திருவள்ளூர் நகராட்சி ஆணையர் திரு.செந்தில்குமரன், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~